பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

01 04 2024 12 40

திங்கட்கிழமை நண்பகல்

## தலைப்புச் செய்திகள்

1. கச்சத்தீவு விவகாரத்தில் தமிழகத்தின் நலனுக்காக திமுக அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திரமோடி குற்றம்சாட்டியுள்ளார்.

2. பிஜேபி அரசு பத்து ஆண்டுகளாக மவுனம் காத்துவிட்டு திடீரென்று மீனவர்கள் நலனில் அக்கறை காட்டுவது ஏன் என்று திமுக தலைவரும், தமிழக முதலமைச்சருமான திரு மு க ஸ்டாலின் கேள்வி எழுப்பியுள்ளார்.

3. ஒடிஸா உருவான தினம் இன்று கொண்டாடப்படுவதையொட்டி தலைவர்கள் பலர் அம்மாநில மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

4. நடப்பு நிதியாண்டின் வரி கணக்கீட்டில் புதிய மாற்றங்கள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை என மத்திய நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

5. ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் இன்றைய ஆட்டத்தில் மும்பை அணி – ராஜஸ்தான் அணியை எதிர்கொள்கிறது.

**[]<<<>>>[]**

கச்சத்தீவு விவகாரத்தில் தமிழகத்தின் நலனுக்காக திமுக அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திரமோடி குற்றம்சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக பிரதமர் வெளியிட்டுள்ள தமது சமூக வலைதளப்பதிவில், இந்த விவகாரத்தில் திமுக-வின் இரட்டைவேடம் தற்போது வெளிப்பட்டிருப்தாகத் தெரிவித்துள்ளார்.

கச்சத்தீவு பிரச்சினையில் காங்கிரஸும், திமுக-வும் காட்டிய அலட்சியமே ஏழை மீனவர்கள் மற்றும் மீனவப் பெண்களின் நலன்களை பாதித்துள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விரு கட்சிகளும் குடும்ப நலனுக்கு மட்டுமே முக்கியத்துவம் அளித்து வருவதாகவும், வேறு எதைப்பற்றியும் கவலைப்படுவதில்லை எனவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய பிஜேபி மூத்த தலைவர்களில் ஒருவரும், மத்திய அமைச்சருமான திரு ஜெய்சங்கர், கச்சத்தீவு விவகாரத்தில் காங்கிரஸும், திமுக-வும் பொறுப்பின்றி செயல்பட்டதாகக் குறை கூறினார்.

கச்சத்தீவை இலங்கைக்கு அளித்தது தொடர்பாக அப்போதைய தமிழக அரசிடம் கலந்து ஆலோசிக்கவில்லை என்று திமுக கூறி வருவது தவறான செய்தி என்று தற்போது தெரிய வந்துள்ளதாக திரு ஜெய்சங்கர் தெரிவித்தார்.

இந்நிலையில் திமுக தலைவரும், தமிழக முதலமைச்சருமான திரு மு க ஸ்டாலின், பத்து ஆண்டுகளாக இது பற்றி பேசாமல் திடீரென்று மீனவர்கள் நலனில் பிஜேபி அக்கறை காட்டுவது ஏன் என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், பிஜேபி ஆட்சியில் தமிழ் நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட சிறப்பு திட்டம் என்ன என்று பிரதமர் தெரிவிக்க வேண்டுமென்று குறிப்பிட்டுள்ளார்.

**[]<<<>>>[]**

பிஜேபி-யின் தேர்தல் அறிக்கை குறிதது இறுதி செய்வதற்காக அக்கட்சியின் மூத்த தலைவர் திரு ராஜ்நாத்சிங் தலைமையில் 27 பேர் கொண்ட குழுவின் முதல் கூட்டம் இன்று புதுதில்லியில் நடைபெற்றது.

திருமதி நிர்மலா சீதாராமன், திரு பியூஷ் கோயல் ஆகியோர் இந்த குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

இதனிடையே காங்கிரஸ் மத்திய தேர்தல் குழுக் கூட்டமும் இன்று புதுதில்லியில் நடைபெற்றது.

அக்கட்சியின் தலைவர் திரு மல்லிகார்ஜூன கார்கே தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், தெலங்கானா மக்களவை தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை முடிவு செய்வது தொடர்பாக விவாதிக்கப்பட்டது.

**[]<<<>>>[]**

தமிழகம், புதுச்சேரி உட்பட 17 மாநிலங்களில் முதல்கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ள 102 மக்களவைத் தொகுதிகளுக்கான தேர்தல் பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

அரசியல் கட்சிகளின் தலைவர்கள் தங்கள் கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவு கோரி தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதற்கிடையே தேர்தல் ஆணையமும் தேர்தல் தொடர்பான நடவடிக்கைகளை முழுவீச்சில் மேற்கொண்டு வருகிறது.

தேர்தல் ஆணையத்தின் **c-Vigil** செயலியை பயன்படுத்தி தேர்தல் நடத்தை விதிமீறல்கள் குறித்து மக்கள் புகார்களை அளிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தமிழகத்தில் மக்களவைத் தேர்தலுக்கான வாக்குச்சாவடி சீட்டுகள் இன்று முதல் விநியோகிக்கப்படும் என தமிழக தலைமை தேர்தல் அதிகாரி திரு சத்ய பிரத சாஹூ தெரிவித்துள்ளார்.

இந்த தேர்தலில் பணபலம் பயன்படுத்தப்படுவதை தடுப்பதற்கான கண்காணிப்பு நடவடிக்கைகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக அவர். கூறியுள்ளார்.

உரிய ஆவணங்களின்றி கொண்டு செல்லப்படும் பணம் மற்றும் பரிசுப் பொருட்களும் பறக்கும் படையினரால் பறிமுதல் செய்யப்பட்டு வருகின்றன.

உரிய ஆவணங்களை சமர்ப்பிக்கும் பட்சத்தில், பறிமுதல் செய்யப்பட்ட பணம் மற்றும் பொருட்கள் சம்பந்தப்பட்டவர்களிடம் ஒப்படைக்கப்படும் என்றும் தேர்தல் ஆணையம் தெளிவுபடுத்தியுள்ளது.

**[]<<<>>>[]**

மக்களவைத் தேர்தலில் முதல்முறை வாக்காளர்கள், வாக்களிப்பதை ஊக்குவிப்பதற்கு நாடு முழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் இது தொடர்பான விழிப்புணர்வு பிரச்சாரங்கள் நடைபெற்று வருகின்றன.

சேலம் மாவட்டத்தில் நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பங்கேற்ற மாணவி முதல் முறையாக வாக்களிக்க உள்ளது தமக்கு மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்று தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் - மாணவி ) - 25 செகண்ட்ஸ்)*

தேர்தலில் 100 சதவீதம் வாக்காளர்கள் வாக்களிப்பதை வலியுறுத்தியும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நாடு முழுவதும் நடைபெற்று வருகின்றன.

இது தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பேசிய திருநங்கை ஒலுவர் 18 வயது நிரம்பிய அனைவரும் கட்டாயம் வாக்களிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

*( சவுண்ட்பைட் - திருநங்கை ) -30- செகண்ட்*

[]<<<>>>[]

நடப்பு நிதியாண்டின் வரி கணக்கீட்டில் புதிய மாற்றங்கள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை என்று மத்திய நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், புதிய வரி கணக்கீடு தொடர்பாக சமூக வலைதளங்களின் வெளியான தகவல்கள் தவறானவை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனி நபர்களே புதிய வரிக்கணக்கீட்டை பயன்படுத்த முடியும் என்றும், அவர்கள் விரும்பினால் பழைய முறையை பயன்படுத்தலாம் என்றும் அமைச்சகம் கூறியுள்ளது.

[]<<<>>>[]

ஒடிஸா உருவான தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு அம்மாநில மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

பரந்த இயற்கை வளத்தையும், சிறந்த கலாச்சாரத்தையும் கொண்ட மாநிலம் ஒடிஸா என்றும், அம்மாநில மக்கள் நல்ல வளத்துடனும், ஆரோக்கியமாகவும் வாழ வாழ்த்துவதாகக். கூறியுள்ளார்.

இது தொடர்பாக குடியரசுத் துணைத்தலைவர் திரு ஜக்தீப் தன்கர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், பழமையான கோவில்கள் முதல், நவீன கண்டுபிடிப்புகள் வரை அனைத்து வகையிலான முன்னேற்றங்களையும் ஒடிஸா கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு நரேந்திரமோடி வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியல், நாட்டின் முன்னேற்றத்திற்காக ஒடிஸா சிறப்பான பங்களிப்பை தந்திருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

[]<<<>>>[]

தில்லி மதுபானக் கொள்கை தொடர்பான சட்டவிரோத பணபரிவர்த்தனை வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள ஆம் ஆத்மி கட்சியின் தலைவரும், தில்லி முதலமைச்சருமான திரு அரவிந்த் கெஜ்ரிவால்-யின் நீதிமன்ற காவலை இம்மாதம் 15-ஆம் தேதி வரை நீட்டித்து தில்லி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மத்திய அமலாக்கத்துறையின் காவல் முடிவடைந்த நிலையில், சிபிஐ சிறப்பு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட திரு அரவிந்த் கெஜ்ரிவாலின் காவலை நீட்டித்து நீதிபதி திரு காவேரி பவேஜா, உத்தரவிட்டார்.

**[]<<<>>>[]**

சத்திஷ்கர் மாநிலம் சுக்மா மாவட்டத்தின் பஸ்டார் பகுதியில் பாதுகாப்புப் படையினர் நடத்திய துப்பாக்கி சண்டையில் மாவோயிஸ்ட் தீவிரவாதி ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

சுக்மா மாவட்டத்தின் **Tetmadgu** பகுதியில் மாவோயிஸ்ட்டுகள் நடமாட்டம் இருப்பதாக கிடைத்த தகவலின்பேரில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது இந்த துப்பாக்கி சூடு சம்பவம் நடைபெற்றது.

அந்த பகுதியில் ஏராளமான வெடிப்பொருட்களும் கைப்பற்றப்பட்டதாக மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திரு கிரண் சௌஹான் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் மும்பை அணி – ராஜஸ்தான் அணியை எதிர்கொள்கிறது.

மும்பையில் நடைபெறும் இப்போட்டி இரவு மணி 7 – 30-க்கு தொடங்குகிறது.

**[]<<<>>>[]**

அருணாச்சால பிரதேசம், அஸ்ஸாம், மேகாலயா, நாகலாந்து, மணிப்பூர், திரிபுரா உள்ளிட்ட மாநிலங்களின் ஒரு சில பகுதிகளில் அடுத்த மூன்று நாட்களுக்க கனமழை பெய்யக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழ்நாடு, புதுச்சேரி, கேரளா, ராயலசீமா, ஆந்திர பிரதேசத்தின் கடற்கரைப் பகுதி மற்றும் ஒடிஸாவில் அடுத்த மூன்று நாட்களுக்கு வெப்பமான சூழல் நிலவும் என்றும் அது கூறியுள்ளது.

***End of News***